**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.98/2021 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.V.பிரதாப், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | சீனுவாசன் | தொழில் |
| த.பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை - 29.10.2024**

நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 4 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதி தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. வா.சா.ஆ.1 - 06.02.2008 தேதியிட்ட பிரதிவாதி, வாதிக்கு எழுதிக்கொடுத்த அசல் கிரய ஒப்பந்த பத்திரம்.

2. வா.சா.ஆ.2 - 06.07.2010 தேதியிட்ட பிரதிவாதி, வாதியிடம் ரூ.20,00,000/- அட்வான்சாகப் பெற்றுக் கொண்டு,எழுதிக்கொடுத்த அசல் ரசீது.

3. வா.சா.ஆ.3 - 27.05.2020 தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல்.

4. வா.சா.ஆ.4 - 04.06.2020 தேதியிட்ட பிரதிவாதியின் ஒப்புகை அட்டை.

(வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்று பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பிரதிவாதியை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் ஒப்பந்தத்திற்கு சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்னர் தெரியும். பிரதிவாதி எனக்கு எப்படி பழக்கம் என்றால் நானும், பிரதிவாதியும் ஒரே ஊரில் இருப்பதால் பழக்கம். வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் திருப்போரூரில் உள்ளது. வழக்கு சொத்து எந்த வகையான நிலம் என்றால் கிராம நத்தம். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 634 சதுர மீட்டராகும். தாவா சொத்தில் வீடு எதுவும் உள்ளதா என்றால் ஒரு வீடு உள்ளது. வழக்கு சொத்து சம்பந்தமாக பிரதிவாதி வேறு எதாவது வழக்கு போட்டுள்ளாரா என்றால் வழக்கு சொத்தில் ஒரு நூலகம் இயங்கிக் கொண்டிருந்தது, அது சம்பந்தமான வழக்கு இருப்பதாக பிரதிவாதி என்னிடம் சொன்னார். நான ் 2008ம ் ஆண்டில ் கிரய ஒப்பந்தம ் போடும்போது வழக்கு நிலுவையில் இருந்ததா என்றால் வழக்கு நிலுவையில் இருந்ததாக பிரதிவாதி என்னிடம் சொன்னார். அந்த வழக்கு எந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது என்றால் அது பற்றி தெரியவில்லை. ஒரு வழக்கு நிலுவையில் இருந்தால் அந்த சொத்தை யாரும் கிரயம் வாங்க மாட்டார்கள் என்றால் வழக்கு நிலுவையில் இருந்தாலும் கிரயம் வாங்குவார்கள். இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக நான் வில்லங்க சான்றிதழ் ஏதும் போட்டு பார்த்தேனா என்றால் போட்டு பார்த்தேன். வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரை எதுவும் பெற்றேனா என்றால் வாங்கவில்லை. பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கு என்ன முடிவானது என்று தெரியுமா என்றால் வழக்கை முடித்து தருகிறேன் என்று பிரதிவாதி சொல்லி நாளை கடத்தி வந்தார். வழக்கு சொத்தில் இருந்த நூலகம் எப்பொழுது காலி செய்யப்பட்டது என்றால் நான் கிரய ஒப்பந்தம் போடும்போது நூலகம் இருந்த இடம் காலியாகத்தான் இருந்தது. பிரதிவாதி வழக்கு சொத்தில் உள்ள கட்டிடத்தை இடிப்பதற்கு உத்தரவு வாங்கி கொடுப்பதாக சொன்னார். எனது பிரமாண வாக்குமூலத்தில் அரசாங்க நூலகம் இயங்கி வந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் அது தவறாகும். 06.02.2008 கிரய ஒப்பந்தத்திற்கு முன்பு 22.03.2007 அன்று பிரதிவாதிக்கு ரூபாய் 2 லட்சம் கடனாக கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த அடமானம் பதிவு செய்யப்பட்ட அடமானம் என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் கடனாக பெற்ற தொகை ரூபாய் 2

லட்சத்தை கிரய தொகையில் கழித்திருக்கலாமா என்றால் கழித்திருக்கலாம், ஆனால் பத்திர பதிவு செய்யும்போது அந்த கடன் தொகையை கழித்திருக்கலாம். 06.02.2008 தேதியிட்ட கிரய ஒப்பந்தம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் எனது அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. கிரய ஒப்பந்தம் எழுதியபோது அசல் ஆவணங்களை பார்த்தேனா என்றால் ஜெராக்ஸ் ஆவணங்களைதான் பார்த்தேன். இந்த வழக்கு சொத்தின் அசல் ஆவணங்கள் யாரிடம் உள்ளது என்றால் பிரதிவாதியிடம்தான் இருக்கிறது. கிரய ஒப்பந்தம் போடுவதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு பேச்சுவார்த்தை நடந்தது என்றால் 2 நாட்களுக்கு முன்பு பேச்சுவார்த்தை நடந்தது. பிரதிவாதி அவருடைய மகளின் திருமணத்திற்காக கிரய ஒப்பந்தம் போட்டார். கிரய ஒப்பந்தம் போடும்போது யார், யார் இருந்தார்கள் என்றால் நான், பிரதிவாதி, அமித்பேகம், கனகசபை மற்றும் 2 நபர்களும் இருந்தார்கள், அவர்களது பெயர் ஞாபகமில்லை. கிரய ஒப்பந்தத்தில் யார், யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் அமித்பேகம் என்பவர் ஒரு சாட்சி கையெழுத்து போட்டார், மற்றொரு சாட்சி கையொப்பம் போட்ட நபரின் பெயர் ஞாபகமில்லை. கனகசபை என்பவர் கிரய ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து போட்டாரா என்றால் போடவில்லை. கிரய ஒப்பந்தத்தை யார் எழுதினார் என்றால் சென்னகேசவன் என்பவர் எழுதினார். கிரய ஒப்பந்தம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 06.02.2008 தேதியில் எழுதப்பட்டது. பிரதிவாதி கிரய ஒப்பந்தத்தில் கையெழுத்து போடும்போது சென்னகேசவன் இருந்தாரா என்றால் இருந்தார். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் எழுதிய நபர் யார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கிரய ஒப்பந்தம் எவ்வளவு ரூபாய்க்கு போடப்பட்டது என்றால் சென்ட் ஒன்றிற்கு ரூபாய் 6 லட்சம் என்று போடப்பட்டது. கிரய முன்பணமாக எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் ரூபாய் 10 லட்சம் கொடுத்தேன். மேற்படி ரூபாய் 10 லட்சத்தை எப்படி கொடுத்தேன் என்றால் பணமாகத்தான் கொடுத்தேன். கிரய ஒப்பந்தம் தேதியில் ரூபாய் 10 லட்சத்தை ரொக்கமாக கையில் வைத்திருந்தேனா என்றால் வைத்திருந்தேன். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் செலுத்துகிறேன். 2008-2009க்கான வருமான வரி செலுத்தினேனா என்றால் சரியாக ஞாபகமில்லை. எனது தொழில் என்னவென்றால் நான் ரியல் எஸ்டேட் மற்றும் விவசாயம் செய்து வருகிறேன். மேற்படி ரூபாய் 10 லட்சம் எனக்கு எப்படி வந்தது என்றால் என்னுடைய

வீட்டை விற்பதற்கு பேசி அதற்கு ரூபாய் 10 லட்சம் வாங்கினேன். மேற்படி வீடு எங்குள்ளது என்றால் தண்டலம் கிராமத்தில் உள்ளது. அந்த வீடு எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 1100 சதுர அடியாகும். அந்த வீட்டு மனையின் அளவு எவ்வளவு என்றால் சுமார் 650 சதுர அடியாகும். அந்த வீட்டை நான் எப்பொழுது விற்றேன் என்றால் வீட்டை விற்று விட்டேன், எப்பொழுது என்று ஞாபகமில்லை. எவ்வளவு நாட்கள் கழித்து அந்த வீட்டை விற்பனை செய்தேன் என்றால் 2008 அல்லது 2009ம் ஆண்டில் விற்பனை செய்தேன். அந்த வீட்டின் கட்டுமானம் எந்த அளவிற்கு நடந்து கொண்டிருந்தது என்றால் பேஸ்மெண்ட் மட்டும் போடப்பட்டிருந்தது. பேஸ்மெண்ட் போட்ட பிறகு நான் இடத்தை விற்றுவிட்டேனா என்றால் இல்லை, நான் வீட்டை கட்டிய பிறகு விற்றேன். 06.08.2008க்கு பிறகு பிரதிவாதிக்கு எப்பொழுது பணம் கொடுத்தேன் என்றால் ரூபாய் 20 லட்சத்தை 06.07.2010ல் கொடுத்தேன். 06.07.2010ல் பிரதிவாதி பணம் பெற்றுக் கொண்டதற்கு ஏதாவது எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் எழுதிக் கொடுத்துள்ளார். 06.07.2010 சமயத்திலும் அடமானம் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். அந்த சமயத்திலும் அடமான கடனை கிரய தொகையுடன் கழித்துக் கொள்ளவில்லை என்றால் கழித்துக்கொள்ளவில்லை. 06.07.2010 அன்று ரூபாய் 20 லட்சத்தை எப்படி கொடுத்தேன் என்றால் ரொக்கமாகதான் கொடுத்தேன். மேற்படி ரூபாய் 20 லட்சம் எப்படி கிடைத்தது என்றால் தண்டலம் கிராமத்தில் 4, 5 வீடுகள் கட்டியதில் ஒரு வீட்டை விற்றதில் ரூபாய் 20 லட்சம் வைத்திருந்தேன். அந்த வீட்டை எப்பொழுது விற்றேன் என்றால் 2010ல் விற்றேன். மற்ற வீடுகளை விற்றுவிட்டேனா என்றால் விற்று விட்டேன். வீடுகளை விற்பனை செய்த ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். 06.07.2010 அன்று பிரதிவாதி என்ன ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் 2வதாக கிரய முன்பணம் கொடுத்த ஆவணம் எழுதிக் கொடுத்தார். அந்த ஆவணம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் என் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. அந்த ஆவணத்தை சென்னகேசவன் என்பவர் எழுதினாரா என்றால் இல்லை, பாலமுரளி என்பவர் எழுதினார். ரூபாய் 20 லட்சம் பிரதிவாதிக்கு கொடுத்தபோது யார், யார் இருந்தார்கள் என்றால் அமித்பேகம் மற்றும் கனகசபை ஆகியோர்கள் இருந்தார்கள். 06.07.2010 அன்று ரூபாய் 20 லட்சம் முன்பணம் கொடுத்தேன் என்று

பொய்யாக சொல்கிறேன் என்றும், வா.சா.ஆ.1 ஆவணம் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)